செ.வெ.எண்: 489/2023 நாள்: 26.08.2023

# வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. செ. கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

சேலம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. செ. கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டார அளவில் காலியாகவுள்ள 6 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணிகளில் சேர இளநிலை பட்டபடிப்புடன் 6 மாத எம்.எஸ்.ஆபிஸ் சான்றிதழ் படிப்பும், 2 வருடம் (மகளிர் திட்டம் தொடர்பான பணிகளில்) பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும் 28 வயதிற்குள் இருக்க வேண்டும்.

மேலும், தங்களது வசிப்பிடம் சம்மந்தப்பட்ட வட்டாரத்திற்குள் (கொளத்தூர், தலைவாசல், மகுடஞ்சாவடி, ஏற்காடு, கெங்கவல்லி) இருக்க வேண்டும். மாத ஊதியம் ரூ.12,000/- வழங்கப்படும். எழுத்துத்தேர்வு மற்றும் நேர்காணலுக்கு பின் தேர்தெடுக்கப்படும் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமார்த்தப்படுவார்கள்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், அறை எண்:207, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,சேலம் என்ற முகவரிக்கு 04.09.2023 ஆம் தேதிக்குள் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

IPROSalem PRO Salem pro.slm PRO Salem